**சமூக பாதுகாப்பு சபை - 2023**

-----------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

சமூக பாதுகாப்பு சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சமூக பாதுகாப்புச் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்புச் சபை அதிகாரச்சட்டத்தின் 15(2) ஆம் பிரிவு | ஏதேனும் பங்களிப்பாளர் ஒருவருக்கு நலன்கள் இழக்கப்பட்டுள்ள போது, சபையால் அந்த நலனாளிக்கு அறிவித்தல் விடுக்கப்பட வேண்டிய போதிலும், நலனாளிகளின் தகவல் உள்ளடக்கப்பட்ட தரவுக் கட்டமைப்பினுள் அறிக்கைகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையின் அடிப்படையில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 717,928 ஆன செயலிழந்த நிலையில் காணப்பட்ட நலனாளிகளுக்கு நலன்கள் இழக்கப்பட்டமை தொடர்பில் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | செயலிழப்பு அறிவித்தல் விடுப்பதற்கு செயற்திட்டமொன்று திட்டமிடப்பட்டுள்ளமை. | அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயலிழந்து நலன்களை இழந்துள்ள அங்கத்தவர்களுக்கு அறிவித்து, அவர்களின் ஓய்வூதிய நலன்கள் இழக்கப்படுவதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,575,183 ஆக மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின பற்றாக்குறை ரூபா 419,422 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,994,605 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு ஆளணி வேதனங்களின் செலவினம் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முறைமையின் கீழ் கடந்த 05 வருடங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிதியத்தின் வருமானம், செலவினம் மற்றும் மிகைகள் மற்றும் அவற்றின் கடந்த வருடத்திற்கு ஒப்பான அதிகரிப்பு மற்றும் வீழ்ச்சி ஆகியவற்றை பரீட்சிக்கும் போது நிதியத்தின் வருமானம் அங்கததவர்களின் பங்களிப்பு பணத்திலிருந்து மற்றும் முதலீட்டு வட்டி ஆகிய வருமானங்களை கொண்டிருந்ததுடன், கடந்த மற்றும் மீளாய்வாண்டு ஆகியவற்றில் வங்கிகளின் நிலையான வைப்பு வட்டி வீதம் அதிக அளவில் உயர்வடைந்த காரணத்தால் வட்டி வருமானம் அதிகரித்து நிதியத்தின் வருமானத்திலான அதிகரிப்பு இடம்பெற்றிருந்தது. எனினும், அதனை நீண்ட காலத்திற்கு எதிர்பார்க்க முடியாது என்பதுடன், பிரதான வருமானமான அங்கத்தவர்களின் பங்களிப்புப் பணம், செலவினத்திற்கு ஒப்பாக அதிகரித்தல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் இந்த நிலைமை அங்கத்தவர்களுக்கு செலுத்துவதற்கு மற்றும் சபையின் செயற்பாடுகளுக்கு பாதகமான முறையில் தாக்கமளித்திருந்தது. | 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் போது அறவிடப்படும் ஆரம்ப தவணைப் பணம் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளதுடன், பின்னரான தவணைகளை அறவிடுவதிலான அதிகரிப்பிற்கு திட்டங்களை தயாரித்து அமுல்படுத்தப்படுகின்றது. | ஓய்வூதிய நிதியத்தின் நோக்கங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சமூக பாதுகாப்பு ஓய்வூதிய முறைமைக்கு புதிய மென்பொருள் கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 12,511,000 தொகையான நிதியேற்பாடொன்று | ரூபா 12 மில்லியன் மேலதிக தொகை கோரப்பட்டமையால் அந்த உடன்படிக்கையை முடிவுறுத்துவதற்கு இரு தரப்பினரும் இணங்கியதுடன் புதிய வழங்குனர் ஒருவரை | சமூக பாதுகாப்பு ஓய்வூதிய உத்தேச முறைமைகளில் செயற்பாட்டு நடவடிக்கைகள் உரிய முறையில் தேடிச் செல்வதற்கு |

திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு 2018 திசெம்பர் 06 ஆந் திகதி உரிய வழங்குநருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 14 ஆந் திகதி முதலாவது வழங்கல் தொகுதிக்கு உரியதாக ரூபா 1,009,250 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கை காலம் 2019 ஆகஸ்ட் 06 ஆந் திகதி நிறைவடைந்திருந்த போதிலும், பணிகள் தாமதமடைந்த காரணத்தால் வழங்குநர் நிறுவனத்தினால் ரூபா 12 மில்லியன் மேலதிக பணம் சந்தை விலை மாற்றமடைந்தமையின் அடிப்படையில் கோரியிருந்ததுடன், அந்த பணத்தை நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நிதி இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் யூன் 16 ஆந் திகதி இரு தரப்பினரது இணக்கப்பாட்டின் அடிப்படையில் உடன்படிக்கையை நிறைவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் செயலாற்றல் பிணை கடந்த வருடத்தின் யூலை 01 ஆந் திகதியின் பின்னரான காலம் நீடிப்பதற்கு முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தால் செலவிடப்பட்ட ரூபா 1,090,250 ஆன தொகை அறவிடப்படாது 4 வருட காலமாக விளைவற்றதாக காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது கணினிக் கட்டமைப்பொன்றினை கொள்வனவு செய்ய அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், கணினிக் கட்டமைப்பை நிறுவத் தவறியிருந்தது. கட்டமைப்பிற்காக திறைசேரியிலிருந்து கிடைத்திருந்த நிதியேற்பாட்டினை நிலையான வைப்புகளில் முதலீடு செய்துள்ளதுடன்,

தெரிவு செய்வதற்கு பத்திரிக்கை அறிவுறுத்தல் வெளியிடப்பட்டுள்ளது. நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதன் மூலம் அந்தப் பணம் 17 மில்லியன் ஆகியுள்ளதுடன் அந்தப் பணத்தை பயன்படுத்தி புதிய கட்டமைப்பொன்றினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை.

மென்பொருள் கட்டமைக்பொன்றினை நிறுவ வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலையான வைப்புகளின் மீதி ரூபா 17,129,263 ஆகும். | | |
| (இ) | திலின, இசுர, சரண, தனலக்சுமி, சுரக்கும் மற்றும் ஆராச்சாவ எனும் ஓய்வூதிய நலன் திட்டங்கள் 07 சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் சுரக்கும் மற்றும் ஆராஸ்சாவ ஓய்வூதிய உத்தேச முறைமைகள் 02 மாத்திரம் செயற்பாட்டில் காணப்பட்டது. சகாண, சரண, திலின, தண லக்சுமி ஆகிய உத்தேச முறைமைகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட அங்கத்தவர்களிடையே 355,504 அங்கத்தவர்களுடையே 81 சதவீதம் அதாவது அங்கத்துவம் 289,356 பேரின் அங்கத்துவம் செயல் இழந்து உள்ளதுடன் சுரக்கும, ஆராஸ்சாவ, மற்றும் இசுர ஆகிய ஓய்வூதிய முறைமைகளுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட 646,289 அங்கத்தவர்களுக்கிடையே 66 சதவீதம் அதாவது 428,572 பேரின் அங்கத்துவம் செயல் அற்று காணப்பட்டது. | செயற்பாட்டில் இல்லாத அங்கத்தவர்களை அந்த முறைமைகளில் செயற்படுத்துவதற்கும் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் இடை நிறுத்தப்பட்டது. அரசின் பங்களிப்பு கிடைக்காமையின் அப்படையில் இந்த உத்தேச முறைமை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கும் அந்த அங்கத்தவர்களை நிறுவனத்திற்கு மற்றும் அரசிற்கு முகங் கொடுப்பதற்கு நேர்ந்துள்ள சிக்கல்களை குறைத்துக் கொள்வதற்கு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பது. | ஓய்வூதிய உத்தேச முறைமையை திட்டம் இடும் போது தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுதல் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஈ) | செயலிழந்த அங்கத்தவர்களினை செயற்படுத்தும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் ரூபா 4.6 மில்லியன் பணம் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் செயல் இழந்துள்ள 8000 அங்கத்தவர்களை செயற்படுத்தவதற்கும் செயற்படுத்துவதன் அடிப்படையில் சேர்க்கப்பட வேண்டிய தவணைப் பணம் ரூபா 80 மில்லியன் வரை சேர்ப்பதற்கு எதிர்பார்த்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் 586,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டு 2724 | மீளாய்வாண்டின் போது ரூபா 5,000,856.68 கிரயம் மேற்கொள்ளப்பட்டு 725 அங்கத்தவர்கள் செயற்படுத்தப்பட்டு ரூபா 7,433,284.81 பணத்தை சேகரிப்பதற்கு நிதிப்பிரிவிற்கு இயலுமை கிடைத்துள்ளதுடன் 3267 அங்கத்தவர்களுக்கு அறிவித்தல் கடிதங்களை அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | எஞ்சிய நிதிகளையும் பயன்படுத்தி செயலிழந்துள்ள அங்கத்தவர்களை செயற்படுத்துவதற்கு துரித மற்றும் செயற்திறனான நடவடிக்கைகள் முன் எடுக்கப்பட வேண்டும். |

அங்கத்தவர்களுக்கு தவணைகளை செலுத்தாமல் தொடர்பில் கடிதங்கள் மூலம் அறிவித்தல் "ஆரச்சாவ" ஓய்வூதிய முறைமையின் 23,745 அங்கத்தவர்களின் 489 அங்கத்தவர்களை மீள செயற்படுத்துதல் மாத்திரம் இடம் பெற்றிருந்தது. அதற்கமைய எதிர்பார்த்தவாறு செயல் இழந்துள்ள அங்கத்துவத்தை செயற்படுத்தும் செயற்திட்டத்தினை வெற்றிகரமானதாக மேற்கொள்ள முடியாதிருந்தது.

(உ) சபையினால் 2017 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த கலைஞர்களுக்காக ஓய்வூதிய முறைமைக்காக கலாச்சார அலுவல்கள் அமைச்சு ரூபா 94 மில்லியன் பணம் வழங்கியிருந்தது. அந்தப் பணம் வங்கி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளபடியாக நிதியத்தின் மீதி ரூபா 167 மில்லியன் வரை அதிகரித்துக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் ஓய்வூதிய உத்தேச முறைமைக்காக 2017 – 2022 காலப்பகுதியினுள் 509 அங்கத்தவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு அவற்றுள் 335 அங்கத்தவர்கள் செயல் இழந்துள்ளதுடன் மீளாய்வாண்டில் 361 அங்கத்தவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு 51 அங்கத்தவர்கள் செயல் இழந்துள்ளன. அதற்கமைய கலைஞர்களுக்காக கிடைத்த பணத்தை உரிய பணிக்கு உரிய முறையில் ஈடுபடுத்துவதற்கு முடியாது போயிருந்தது.

கலைஞர்களின் பங்களிப்பின் கீழ் ஓய்வூதியம் ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு விருப்பமின்மை மற்றும் அவர்கள் அரசாங்கத்திடம் இருந்து இலவசமாக ஓய்வூதியம் ஒன்றினை எதிர்பார்க்கின்றமையினால் தொடர்ந்தும் கலைஞர்களுக்கு செலுத்துவதற்கு உள்ள தவணைகளை கழித்து தயாரிக்குமாறு கலந்துரையாடப்பட்டுள்ளமை.

ஓய்வூதிய முறைமைக்காக கலைஞர்களை இணைத்துக்கொள்ளும் போது குறித்த பணிகளை உரிய முறையில் மேற்கொண்டு ஓய்வூதிய முறைமையின் நலன்களை ஒட்டு மொத்த கலைஞர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.